15. Thiru K. Jayaraman
16. Thiru S. Duraiswamy.
17. Thiru S. Murugaiyan.
18. Thiru A. M. T. Nachiyappan.
19. Thiru K. M. Subramaniam.
20. Thiru M. Subramaniam (Erode).

(3) மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும் அரசின் தீர்மானத்திற்குத் திருத்தங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும், அரசின் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் 1974 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 24 ஆம் நாள் மாலை 5 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. அரசின் தீர்மானம்.

(1) சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்துசமய நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, "சாதி பிரிவு, உட்பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில், இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களையும், பூசாரிகளையும், ஏனைய உள்துறை ஊழியர்களையும் பரம்பரை முறையில் நியமனம் செய்யும் நடைமுறை பற்றி பொதுமக்கள் பரவலாகக் குறைபாடு கூறுதல் இருப்பதாலும்;

இந்து சமூகத்தில் நிலவும் பரம்பரை முறையில் சமயப் பூசாரிகளை நியமிக்கும் முறை நீக்கப்பட வேண்டுமென்றும், இதற்குப் பதிலாக சமய சார்புள்ள நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், தேவையான கல்வித் தகுதி உள்ளவர்கள், ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களில் பூசாரிக்குரிய பணிகளில் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்றும், சாதி, இனம் அல்லது வகுப்பு வேறுபாடின்றி அனைவருக்கும் பூசாரிகளாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், "தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு" கருத்து தெரிவித்துள்ளதாலும்;